III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.288/2019

Deposition of witness for the Plaintiff/PW4
solemnly by Tmt.K.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 16-02-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | P.Anandan @ Premanandam | Village | : |
| Father's / Husband's Name | : | Gondaiah | Calling | : |
| Age | : | | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டதால் தான் சாட்சியம் அளிக்க வந்திருக்கின்றேன் என்றால் உண்மையை சொல்ல வந்திருக்கின்றேன். வாதிகளை எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் முத்தையாள் பேட்டையில் மத போதகராக 2008 லிருந்து 2012 வரை இருந்தேன். அந்த கால கட்டத்தில் நான் சரோஜம்மாள் வீட்டீல் குடியிருந்து வந்தேன். அப்போது வாதிகள் மேல் வீட்டில் குடியிருந்து வந்தார்கள். வாதிகளிடம் நான் வாடகைதாரராக இருந்ததை காட்ட ஒப்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அப்போது இருந்தது. அந்த வாடகை ஒப்பந்தத்தை என்னால் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியுமா என்றால் அது தற்போது இல்லை. இந்த வழக்கின் பிரதிவாதிகள் கிருஷ்ணமூர்த்தி, ஜீலியட் ஆகியோர்கள் என்மீது பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் முன்னிலையாகி இருந்தேன். நான் பொய்சொல்கின்றேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் முன்னிலையாகாமல் எதிரவர் இல்லா நிலையில் வைக்கப்பட்டேன் என்றால் சரிதான். சரோஜம்மாள் தாவா சொத்தில் தனியாக இருந்தார்களா என்றால் அந்தோனியம்மாள் பாக்கியலட்சுமியுடன் இருந்தார். பாக்கியலட்சுமி வேறு எங்கும் வசிக்கவில்லை அந்த வீட்டில் தான் இருந்தார். பிரதிவாதிகள் வாதிகள் மீது ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நீதிமன்றத்தில் இவ்வழக்கின்

பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டு சுவாதீனமும் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் இருவரும் சேர்ந்து என்னை சாட்சியம் அழைக்க அழைத்தார்கள். பிரதிவாதிகள் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜீலியட் எனக்கு எதிராக நான் வாடகைதாரராக இருந்தபோது வாடகை செலுத்தவில்லை என்று போலிசில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் சரோஜம்மாளிடம் தான் முதன் முதலாக வாடகைதாரராக வந்தேன் என்றால் சரிதான். சரோஜம்மாள் அதன்பிறகு அந்த சொத்தை 2 ஆம் பிரதிவாதி ஜீலியட்டுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் பெற்ற பிறகு நான் வாடகை கொடுக்காததால் தான் என்மீது புகார் கொடுத்தார்கள் என்றால் ஆம் கொடுத்தார்கள். நான் முதலில் பாக்கியலட்சுமியிடம் வாடகைதாரராக இருந்தேன் என்று சொல்லிவிட்டு தற்பொழுது சரோஜம்மாளிடம் வாடகைதாரர் என்று மாற்றிசொல்கின்றேன் என்றால் சரியல்ல. பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் அதை ஏற்ககூடாது என்றாலும் சரியல்ல.

(3 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).